செ.வெ.எண்: 25 நாள்: 15.09.17

## செய்தி குறிப்பு

### விவசாயிகளுக்கு மானியத்தில் சூரியசக்தி நீர் இறைப்பான்

கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு சூரியசக்தி நீர் இறைப்பான் மான்ய விலையில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடலூர் மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், திறந்தவெளிக் கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் சூரிய சக்தியால் இயங்கும் நீர் இறைப்பான்கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளன, அதன்படியில் 5 HP, 7.5 HP மற்றும் 10 HP மோட்டார்கள் இயக்கும் வகையில் 90 சதவீதம் மானியத்தில் வழங்கப்பட உள்ளன.

கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்கள், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

விவசாயிகள் தங்கள் நிலத்தில் திறந்தவெளி கிணறு அல்லது குழாய் கிணறு (Borewell) வைத்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இலவச விவசாய மின் இணைப்பு பெற்றவர்கள் அந்த மின்இணைப்பை துண்டித்துக் கொள்ள வேண்டும்.

இலவச விவசாய மின் இணைப்பிற்கு பதிவு செய்துள்ளவர்கள் அதனை திரும்ப பெறவேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள விவசாயிகள் அந்தந்தப் பகுதியில் உள்ள கீழ்க்காணும் உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அலுவலக முகவரி மற்றும் தொலைபேசி எண் விவரம்

1. உதவி செயற்பொறியாளர்(வேபொ),
   சின்னகங்கணாங்குப்பம்,
   கடலூர்.

   தொலைபேசி எண் – 04142 – 292770

2. உதவி செயற்பொறியாளர் (வேபொ),
   தில்லை காளியம்மன் கோவில் அருகில்,
   பூதக்கேணி, பள்ளிப்படை,
   சிதம்பரம் – 608 001.

   தொலைபேசி எண் – 04144 – 232707

3. உதவி செயற்பொறியாளர் (வேபொ),
   சிதம்பரம் ரோடு, பூதாமூர்,
   விருத்தாசலம் – 606 003

   தொலைபேசி எண் – 04143 – 238242

மாவட்ட ஆட்சியர்

செ.பொ(வேபொ) மா.ஆ.நே.மு.உ.

வெளியீடு - செ.ம.தொ.அ. கடலூர்.